CAREERINDIA

**SET – 4**

**Series : TYM/C**

**Code No. 10**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **12** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்
- வினாத்தாளில் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப்பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் 9 வினாக்கள் உள்ளனவா எனச்சரி பார்க்கவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு **16**நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் **10.15**க்குக் கொடுக்கப்படும். **10.15**இல் இருந்து**10.30**வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

- Please check that this question paper contains **12** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **16** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி*
*Time allowed : 3 hours*

*மொ. மதிப்பெண்கள்: **80***
*Maximum Marks: **80***

CAREERINDIA

## பகுதி-அ (படித்தல்)
## SECTION – A (Reading)

1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. **5 × 1 = 5**

அக்காலத்தில் பல்வகை அரண்கள் நாட்டுக்குக் காவலாக இருந்தன. நகரைச் சூழக் காட்டரண் உண்டு. அது மிளை எனப்பட்டது. கோட்டைகள் விண்தோய் உயர்வுடையன. அவற்றைச் சூழ ஆழமான அகழிகள் உண்டு. அகழிகளில் முதலைகள் நீந்திக் கொண்டிருந்தன. அகழிகளைப் படகுகளின் உதவியால் தான் கடக்க முடியும். மதில்களை இஞ்சி, புரிசை, அகப்பா என்று குறித்துள்ளனர். கோட்டை மதிலின் உள்வட்டமே அகப்பா. சமவெளிகளில் இருந்த சிறு அரண் குறும்பு எனப்பட்டது. கோட்டைச் சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டனபோல் இருந்தன. எனவே "செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை" என்று பாராட்டினர். கோட்டைக்கு உள்ளே வீரர்கள் நின்று போரிடும் இடம் ஞாயில் எனப்படும். வீரர்கள் நின்று அம்பு எய்யும் இடம் ஏப்புழையாகும். கோட்டைக்கு இரண்டு சுற்றுச் சுவர் உண்டு. மதிலில் கொடிகள் அசையும் இரட்டைக் கதவுகள் உண்டு.

கோட்டை மதிலின்மேல் பல பொறிகள் அமைக்கப்பட்டன. அவை சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோட்டையைக் கைப்பறியபின் பொருள்களைக் கவர்ந்து தமக்குள் பங்கிட்டுக் கொள்வர். அந்நாட்டுக் கொடியை நீக்கிவிட்டுத் தம் நாட்டுக் கொடியை நாட்டுவர்.

வினாக்கள் :

(i) அக்காலத்தில் நாட்டிற்குக் காவலாக அமைந்தவை யாவை?

(அ) கடல்கள் (ஆ) அரண்மனைகள்
(இ) வீடுகள் (ஈ) அரண்கள்

(ii) காட்டரணுக்கு வழங்கப்படும் வேறு யார்?

(அ) புரிசை (ஆ) மிளை
(இ) அகப்பா (ஈ) அகழி

(iii) கோட்டைக்குள் வீரர்கள் நின்று போர்புரியும் இடம்

(அ) ஞாயில் (ஆ) இஞ்சி
(இ) செம்பு (ஈ) ஏப்புழை

www.careerindia.com

CAREERINDIA

(iv) அகழிகளை எவ்வாறு கடப்பர்?

(அ) நீந்தி (ஆ) கப்பல் உதவியால்

(இ) படகின் உதவியால் (ஈ) படிக்கட்டுகள் உதவியால்

(v) கோட்டையைக் கைப்பற்றிய பின் என்ன நிகழும்?

(அ) அரசனைச் சிறை பிடிப்பர் (ஆ) அகழியில் தப்பிச் செல்வர்

(இ) வென்றவர் தம் நாட்டுக் கொடியை நாட்டுவர்

(ஈ) வீரர்களைப் பாராட்டுவர்

2. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. **5 × 1 = 5**

உப்பு வணிகர்களான உமணர்கள், நகரின் ஒரு பகுதியிலிருந்து வர்த்தகம் செய்த மற்ற வணிகர்களுக்கு மாறாக, ஊரூராய்ச் சென்று தங்கள் வியாபாரத்தை மேற்கொண்டனர். சங்க இலக்கியத்தின் பல பக்கங்களில் பயணம் செய்யும் உப்பு வணிகர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உப்பு வணிகர்களின் வண்டிகள், பழத்தோல்களாலான மாலைகள் அணிந்த, வலுவான காளைகளால் இழுக்கப்பட்டன. இந்த வண்டிகளோடு சென்று, உப்பு வணிகர்களுடன் பிராயணம் செய்த அவர்களின் குழந்தைகளோடு, குரங்குகள் விளையாடின.

வண்டிகள் பனை ஓலைகளில் செய்யப்பட்ட பாய்களால் மூடப்பட்டிருந்தது. அதற்கு மேலாகக் கூரை வேயப்பட்டிருந்தது. வண்டியின் பக்கவாட்டில், சிறிய அம்மிக்கல்லும், ஊறுகாய் ஜாடி ஒன்றும் தொங்கவிடப்பட்டிருந்தன. கைக்குழந்தையோடு அந்த வண்டியை வணிகரின் மனைவி செலுத்திக் கொண்டிருந்தாள். அகலமான, அழகான, சதைப்பற்றுமிக்க தோள்களை அந்த வணிகர்கள் கொண்டிருந்தனர். மாடுகள் நுகத்தடியில் வலுவான கயிறுகளைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. வணிகர்கள், பாதுகாப்பாக, வண்டிகளோடு சென்றனர். வண்டிகள் தொடர்ந்து செல்லும்படியும் பார்த்துக் கொண்டனர். பல்வேறு நகர்களுக்குச் செல்லும் நீண்ட சாலைகளில் அவர்களுடைய காளைமாடுகளோடு அவர்கள் சென்றனர்.

வினாக்கள் :

(i) உமணர்கள் எனப்படுவோர் யாவர்?

(அ) பழ வியாபாரிகள்

(ஆ) வணிகர்கள்

(இ) உப்பு வணிகர்கள்

(ஈ) உரிமைகள் கொண்டவர்கள்

www.careerindia.com

CAREERINDIA

(ii) உப்பு வணிகர்களின் குழந்தைகளோடு விளையாடியவை
(அ) குரங்குள் (ஆ) காளைகள்
(இ) அணில்கள் (ஈ) கடல் அலைகள்

(iii) உப்பு வண்டியைச் செலுத்தியவர்
(அ) வணிகரின் மனைவி (ஆ) குழந்தை
(இ) காளைகள் (ஈ) வணிகர்

(iv) வணிகர்கள் வண்டிகளோடு எவ்வாறு சென்றனர்?
(அ) பாதுகாப்பாக (ஆ) பயத்துடன்
(இ) பயமின்றி (ஈ) தயக்கமின்றி

(v) உப்பு வணிகர்கள் எதில் ஈடுபட்டிருந்தனர்?
(அ) சமைப்பதில் (ஆ) விளையாடுவதில்
(இ) சம்பாதிப்பதில் (ஈ) உப்பு தயாரிப்பதில்

3. பின்வரும் பகுதியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. **5 × 1 = 5**

*1971 – இல் சென்னைக்கு அருகில் உள்ள கல்பாக்கத்தில் அணுஉலை ஆய்வு மையம் தொடங்கப்பட்டது. இந்த ஆய்வு மையம் 1985 – ஆம் ஆண்டு இந்திரா காந்தி அணு ஆய்வு மையம் என்ற பெயரைப் பெற்றது. இந்த ஆய்வு மையம் நவீன வசதிகளுடன் ஆய்வகங்களைக் கொண்டுள்ளது. இங்கு அணு ஆற்றல் தொடர்புடைய இயற்பியல், வேதியியல், உலோகவியல், அணுஉலை வடிவமைப்பு போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*இந்த அணுஉலை ஆய்வு மையத்தால் வடிவமைத்துக் கட்டப்பட்ட வேக சோதனை ஈனுலை (Fast Breeder Test Reactor) 1985 அக்டோபரில் முதன்முதலில் இயக்க நிலைக்கு வந்தது. இது ஒரு குளிர் ஊட்டப்பட்ட சோடியம் சோதனை (Sodium Cooled Experimental Reactor) உலையாகும். இந்த வேக ஈனுலையைப் பயன்படுத்தி ஒரு மெகாவாட் அளவு மின்திறன் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின் தொகுப்புடன் 1987 ஜூலை 11 – இல் இணைக்கப்பட்டது.*

*இதே போல கல்பாக்கம் மினி – காமினி அணு உலையும் இங்குள்ள ஆராய்ச்சி மையத்தினால் வடிவமைத்துக் கட்டப்பட்டது. இது 1996 அக்டோபர் 16 – இல் செயல்படத் தொங்கியது. தனது முழுத்திறனான முப்பது கிலோவாட் அளவை 1997 செப்டம்பர் 17 – இல் எட்டியது. இதில் யுரேனியம் – 233 மற்றும் அலுமினியக் கலப்பு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.*

*அணு உலையில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளை மறு வழிப்படுத்தி புளூட்டோனியத்தை உருவாக்கும் கல்பாக்கம் மறு வழிமுறை நிலையம் (Reprocessing Unit) 1996 மார்ச் 23 – முதல் செயல்பட்டு வருகிறது. இதில் பெறப்படும் புளூட்டோனியத்தை வேக அணு உலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தலாம்.*

www.careerindia.com

CAREERINDIA

## பகுதி-ஆ (எழுதுதல்)
## SECTION – B(Writing)

4. உங்கள் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் சிறப்பினையும் நீ மகிழ்ந்ததையும் குறித்து உன் தோழன்/ தோழிக்குக் கடிதம் ஒன்று எழுதுக. **1×6 = 6**

*(அல்லது)*

உங்கள் பகுதியில் குழந்தைகள் விளையாடி மகிழ்வதற்கும் பொது மக்கள் நடைப்பயிற்சி பழகுவதற்கும் ஏற்ற பூங்கா ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டி மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(இரண்டிலும் உம் முகவரி ச. வளவன் / ம. பொன்னி, எண் 19, வள்ளியூர் வீதி, பல்லாவரம் –5 எனக்கொள்க.)

5. ஏதேனும் ஒன்றை விவரித்துக் கட்டுரை வரைக. **1×8 = 8**

(i) முன்னுரை – காலம் பொன் போன்றது – திட்டமிடுதல் – உரிய நேரத்தில் முடித்தல் – வாய்ப்புள்ளபோது பயன்படுத்திக் கொள்ளுதல் – இளமையில் கல்வி – எதிர்காலத் திட்டங்கள் – நல்ல சமூகச் சிந்தனைகள் – நேரத்தின் பயன்பாடுகள் – கடமை – முடிவுரை.

(ii) முன்னுரை-இன்றைய வாழ்வு – அறிவியல் பயன்பாடு – எங்கும் அறிவியல் எதிலும் அறிவியல் – வியத்தகு உண்மைகள் – ஆக்கத்தின் வெளிப்பாடே அறிவியல் – பொருளாதார வளர்ச்சியில் அறிவியலின் பங்கு – இளைஞர்களின் ஆற்றலும் கடமையும் – முடிவுரை.

(iii) முன்னுரை-கூடி வாழ்ந்தால் கோடி நன்மை – பாரதியின் கூற்று – வேற்றுமையில் ஒற்றுமை – பாரதத்தின் வலிமை – உலக மக்களுடன் உறவின் மேன்மை – யாதும் ஊரே யாவரும் கேளிர் – ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – முடிவுரை.

www.careerindia.com

CAREERINDIA

## பகுதி-இ(இலக்கணம்)

## SECTION – C (Grammar)

6. சான்று தருக. (மூன்றனுக்கு மட்டும்) **3× 1 = 3**

(i) ஓரெழுத்துச் சொல்

(அ) பலகை (ஆ) கண்

(இ) கை (ஈ) மலர்

(ii) ஒன்றொழி பொதுச் சொல்

(அ) பசு கன்றை ஈன்றது (ஆ) எருது வயலை உழுதது

(இ) மாடு கன்றை ஈன்றது (ஈ) பசு புல் தின்றது.

(iii) புளிமா

(அ) கலம் (ஆ) மலை

(இ) மாலை (ஈ) வனம்

(iv) சீர் – ஏகாரம்

(அ) நாடென்ப (ஆ) நாடு

(இ) நாட்டே (ஈ) நாட்டை

(v) முல்லை நிலம் – நீர்

(அ) கிணறு (ஆ) ஏரி குளம்

(இ) மலையாறு (ஈ) காட்டாறு

7. நிரப்புக. (மூன்றனுக்கு மட்டும்) **3× 1 = 3**

(i) குறுக்கங்கள்........... வகைப்படும்

(அ) மூன்று (ஆ) நான்கு

(இ) ஆறு (ஈ) இரண்டு

(ii) பாம்பு ! பாம்பு! என்பது .......... தொடர்

(அ) அடுக்குத் தொடர் (ஆ) உவமைத் தொடர்

(இ) தொகைநிலைத் தொடர் (ஈ) தொகாநிலைத் தொடர்

www.careerindia.com

(iii) வைகறை என்பது ............நிலத்தின் சிறுபொழுது

(அ) நெய்தல் நிலம் (ஆ) முல்லை நிலம்

(இ) குறிஞ்சி நிலம் (ஈ) மருத நிலம்

(iv) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடி வரை பெற்று வருவது .....

(அ) நேரிசை வெண்பா

(ஆ) பஃறொடை வெண்பா

(இ) இன்னிசை வெண்பா

(ஈ) இன்னிசைச் சிந்தியல் வெண்பா

(v) ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது .......

(அ) வஞ்சப்புகழச்சியணி (ஆ) செம்மொழிச் சிலேடை

(இ) பிரிமொழிச் சிலேடை (ஈ) பிறிது மொழிதலணி

8. கூறியவாறு மாற்றுக. (மூன்றனுக்கு மட்டும்) **3× 1 = 3**

(i) உண்ட இளங்கோவன் (எதிர்மறையாக்குக)

(அ) இளங்கோவன் உண்டான்

(ஆ) உண்ணாத இளங்கோவன்

(இ) உண்ணும் இளங்கோவன்

(ஈ) இளங்கோ

(ii) ஓங்கிய மரம் (ஒரு பொருட் பன் மொழியாக்குக)

(அ) மரம் உயர்ந்தது (ஆ) மரம்

(இ) உயர்ந்த மரம் (ஈ) உயர்ந்தோங்கிய மரம்

(iii) கீழ்நாடு (எவ்வகைப் புணர்ச்சி)

(அ) திசைப்பெயரோடு திசைப்பெயர்

(ஆ) பண்புப்பெயர்

(இ) திசைப்பெயரோடு பிறபெயர்

(ஈ) திசைப்பெயரோடு பண்புப்பெயர்



www.careerindia.com

CAREERINDIA

(iv) வளர்க (ஈற்றுச் சொல் வாய்பாடு)

(அ) காசு (ஆ) நாள்

(இ) மலர் (ஈ) பிறப்பு

(v) பல பல (இரட்டைக் கிளவியாக்குக)

(அ) பலப்பல (ஆ) பளபள

(இ) பலா (ஈ) பள

9. இலக்கணக் குறிப்பு எழுதுக.. (மூன்றனுக்கு மட்டும்) **3× 1 = 3**

(i)மதி போன்ற முகம்

(அ) உவமைத் தொகை (ஆ) உருவகம்

(இ) இரட்டைச் சொல் (ஈ) விரியுவமை

(ii) வெற்றி பெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது

(அ) வாகைத்திணை (ஆ) நொச்சித்திணை

(இ) பொதுவியல் திணை (ஈ) காஞ்சித்திணை

(iii) நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்

(அ) மூன்று விகற்பம் (ஆ) ஒரு விகற்பம்

(இ) இரு விகற்பம் (ஈ) நான்கு விகற்பம்

(iv) கல், மண்

(அ) குறிப்புச் சொற்கள் (ஆ) வெளிப்படைச் சொற்கள்

(இ) இனங்குறித்தல் (ஈ) இடைச்சொல்

(v) இதன் பொருள் யாது ? என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது

(அ) ஐயவினா (ஆ) கொளல்வினா

(இ) அறியாவினா (ஈ) அறிவினா

www.careerindia.com

10. சரியான தொடரைத் தேர்வு செய்க. (மூன்றனுக்கு மட்டும்) **3× 1 = 3**

(i) (அ) தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா ஐயவினா

(ஆ) தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா ஏவல்வினா.

(இ) தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா கொடைவினா.

(ஈ) தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா கொளல்வினா.

(ii) (அ) சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் இளவேனிற்காலம்.

(ஆ) சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் முதுவேனிற்காலம்.

(இ) சித்திரை, வைகாச ஆகிய இரண்டும் முன் பனிக்காலம்.

(ஈ) சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் பின் பனிக்காலம்.

(iii) (அ) பா பதினாறு வகைப்படும்.

(ஆ) பா நான்கு வகைப்படும்.

(இ) பா மூன்று வகைப்படும்.

(ஈ) பா இரண்டு வகைப்படும்.

(iv) (அ) உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது வஞ்சப்புகழச்சியணி

(ஆ) உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது சிலேடையணி

(இ) உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது தற்குறிப்பேற்ற அணி

(ஈ) உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதலணி

(v) (அ) சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஐகாரம் வராது.

(ஆ) சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் மகரம் வராது.

(இ) சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வராது.

(ஈ) சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் குற்றியலிகாரம் வராது.

CAREERINDIA

## பகுதி – ஈ (இலக்கியம்)

## SECTION – D (Literature)

11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5× 1 = 5**

அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு; அறத்தின் வழியே பொருளைக் கண்டது; அவ்வறத்தின் வழியே இன்பத்தினை எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர். அறத்தினைக் கைக் கொண்டதனால் வீடுபேறு என ஒன்று வேண்டாததாயிற்று. பழந்தமிழர் அன்பு வழியினர். அறத்துக்கே அன்பு சார்பு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தினையும் ஏற்றிப் போற்றினர். ‘களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே’ என்னும் புறப்பாடல், வீரத்தினை முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர், பெண்களின் பெருவீரத்தினைப் பாடுகிறார். முதல் நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள், பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே அவள் துணிவு!

பண்டைத் தமிழரின் தொன்மையை, மொழியின் பெருமையை, தொழில் வளத்தை, உழவின் சிறப்பை, நாகரிக வாழ்வை, அன்பின் திறத்தினை, வீரத்தின் மாண்பை அறிவோம்; தொன்மைத் தமிழகத்தின் பெருமையை உணர்வோம்.

வினாக்கள் :

1. பழந்தமிழர் எதனை நன்கு உணர்ந்தனர்?
2. வீரம் பற்றிய புறப்பாடல் கூற்று யாது?
3. பெண்டிர் யாரை மணந்து கொள்ள மாட்டார்கள்?
4. இப்பத்தியில் உள்ள பெண்பாற்புலவர் யார்?
5. மூன்றாம் நாள் போரில் வீரப்பெண் செருக்களத்திற்கு யாரை அனுப்பினாள்?

www.careerindia.com

CAREERINDIA

12. பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்குச் சரியான விடை தேர்ந்து எழுதுக. **4× 1 = 4**

தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.

வினாக்கள் :

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
(அ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
(ஆ) கலித்தொகை
(இ) தேவாரம்
(ஈ) திருவாசகம்

(ii) சங்கரன் எனப்படுவபர் யார்?
(அ) திருமால் (ஆ) சிவபெருமாள்
(இ) அயன் (ஈ) அய்யனார்

(iii) இறைவன் காதில் குழையாகக் கொண்டது
(அ) வெண்முத்து (ஆ) செம்பவளம்
(இ) செம்பொன் (ஈ) வெண்சங்கு

(iv) இப்பாடல் ஆசிரியர்
(அ) திருஞானசம்பந்தர் (ஆ) சுந்தரர்
(இ) மாணிக்கவாசகர் (ஈ) திருநாவுக்கரசர்

13. பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக. **4×½ = 2**

1. பருவத்தோ டொட்ட ஒழுகல் ……………
தீராமை………………..கயிறு.

2. தம்மிற்………………தமரா ஒழுகுதல்
வன்வமையுள் எல்லாம்…………

www.careerindia.com

CAREERINDIA

14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. **2×4 = 8**

(i) "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

(ii) (அ) புறநானூறு – குறிப்பு எழுதுக.

(ஆ) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

(iii) புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(iv) நிற்க நேரமில்லை – பாடல் மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளிக்க. **2×5 = 10**

(i) அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?

(ii) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்தெழுதுக.

(iii) தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்து எழுதுக.

(iv) அறவழி விடுதலைப் போர் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(v) தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக **1×7 = 7**

(i) மெல்ல மெல்ல மற!

(ii) தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

(iii) அயோத்திதாசப் பண்டிதர்

www.careerindia.com